செய்தி வெளியீடு எண் :11 நாள் :05.05.2020

**தேனி மாவட்டம்**

**ஒரு நபர் மூன்று தினங்களுக்கு ஒரு முறை, குறிப்பாக மூன்று மணி நேரம் மட்டுமே வெளியில் சென்று வர அனுமதிக்கப்படுவார்கள்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

**********

தேனி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்குதல் (COVID-19) பரவாமல் தடுப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்புடன் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகிறது. கட்டுப்பாட்டு பகுதி அல்லாத இடங்களில் பொதுமக்களின் நலன்கருதி தமிழக அரசு தடை உத்தரவை தளர்த்தி உள்ளது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் கடந்த இரண்டு தினங்களாக அதிக அளவில் கூட்டமாகவும், சமூக இடைவெளியை கடைபிடிக்காமலும் சென்று வருவதால் நோய் தொற்று பரவும் வாய்ப்பு உள்ளது. இதனை சீர் செய்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தளர்வு அறிவிக்கப்பட்ட போதிலும், சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை, கூட்டம் கூடுதல் போன்ற காரணங்களால் நோய் தொற்று பரவுதலை தடுப்பதற்காக பொதுமக்களின் நலன் கருதி நாளை (06.05.2020) முதல் ஒரு நபர் மூன்று தினங்களுக்கு ஒரு முறை, குறிப்பாக மூன்று மணி நேரம் மட்டுமே வெளியில் சென்று வர அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்கென அனுமதி பெற சாதாரண அலைபேசி இருந்தால் போதுமானது ஆகும். இந்த அனுமதி பெற 94880-56600 என்ற அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வாயிலாக, - வாகன எண், வெளியில் சென்றுவர காரணம் ஆகியவற்றை டைப் செய்து அனுப்பி, அனுமதி பெறலாம்.

**எடுத்துக்காட்டாக, உங்களது வாகன எண் TN 60 Y 0000 எனில் மற்றும் நீங்கள் வெளியில் செல்வதற்கான காரணம், அத்தியாவசிய பொருட்கள் வாங்க வேண்டும் எனில் நீங்கள் 94880-56600 எண்ணிற்கு பின்வரும்படி குறுஞ்செய்தி அனுப்பிட வேண்டும்.**

**TN60Y0000 அத்தியாவசிய பொருள் வாங்க**

மேலும், அந்நபரின் அலைபேசிக்கு அனுப்பப்படும் அனுமதி குறுஞ்செய்தியின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்ட நாள் மற்றும் குறிப்பிட்ட 3 மணி நேரத்திற்குள் சென்று வர வேண்டும். இதற்கான விளக்கப்படம் **https://youtu.be/woV0o-bEMaM என்ற Link** மூலம் **YouTube-ல்** பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அனுமதியில்லாமல் வெளியில் வருபவர்களை காவல் துறை மற்றும் வருவாய்த்துறையினர் தணிக்கையின்போது கண்டுப்பிடிக்கப்பட்டால் அவர்களின் மீது உரிய நடவடிக்கைககள் மேற்கொண்டு, வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும். எனவே, ஒரு மூன்று தினங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்க முன்கூட்டியே திட்டமிட்டு, நோய் பரவுதலின் தாக்கத்தை அறிந்து தற்காத்து கொள்ள அவசியமான காரணங்களுக்கு மட்டுமே வெளியில் சென்று வரும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**